கல்வி நிதி உள்ளிட்ட தமிழ்நாட்டின் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்த -

ஒன்றிய அரசு தனது சித்தாந்தத்தை தமிழ்நாட்டில் திணிக்கிறது!

மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 9 - மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆற்றிய உரை வருமாறு:

நான் இந்த அவையில் பேசக் காரணமாயிருக்கிற என்னுடைய தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த மண் ஈரோடு தொகுதி மக்களுக்கும், என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சை துவக்குகிறேன்.

மைனாரிட்டி ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் சமர்ப்பித்த 2024-25க்கான பட்ஜெட் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. இந்த பட்ஜெட் முழுக்க முழுக்க தமிழ்நாட்டு மக்கள் விரோத மானது, தொலை நோக்குப் பார்வையற்றது, அரசியல் நோக்கத்தை மட்டுமே மனதில் கொண்டுள்ளது பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகளை திருப்தி படுத்தும் வகையில் எந்தத் தெளிவும் தொலைநோக்கு பார்வையும் இல்லாத பட்ஜெட் இது.

நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த பட்ஜெட், தமிழ் நாடு மற்றும் பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. வழக்கமாக நிதி அமைச்சர் பட்ஜெட்டில் திருக்குறளிலிருந்து ஒரு குறல் வாசிப்பார், ஆனால் இந்தமுறை அதுவும் இல்லை, தமிழ்நாடு என்ற வார்த்தை பெயருக்குக்கூட இல்லை.

"ஆண்டுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு" என்ற முழக்கம், 2014ல் அறிவிக்கப்பட்டது, ஆனால், இந்த பட்ஜெட்டில் 10 ஆண்டுகள் ஆன பிறகும், இந்த நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்த அறிவிப்பு இல்லை. இந்தியாவில் வேலையின்மை நெருக்கடி குறிப்பாக இளைஞர்கள் மற்றும் படித்தவர்களிடையே கடுமையாக உள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) சமீபத்திய அறிக்கையின்படி, கல்வியறிவு பெற்றிருப்பது இந்தியாவில் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் இல்லை. இந்தியாவில் வேலையில்லாதவர்களில் கிட்டத்தட்ட 83 சதவீதம் பேர் இளைஞர்கள், மேலும் இந்த வேலையற்ற இளம் இந்தியர்களில் கிட்டத்தட்ட 66 சதவீதம் பேர் படித்தவர்கள். 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லா திண்டாட்டத்தை இந்தியா சந்தித்து வருகிறது.

கடவுளின் குழந்தை என்று தன்னை கூறிக்கொள்ளும் பிரதமர் 45 ஆண்டுகளில் இந்தியாவின் மிக மோசமான வேலையின்மை விகிதத்தை உருவாக்கியுள்ளார். 10 ஆண்டுகளுக்கு முன்பு மோடி அவர்கள் பல தேர்தல் வாக்குறுதிகளை அளித்தார். மேக் இன் இந்தியா அல்லது அம்ருத் காலின் (பொற்காலம்) போன்றவற்றுக்கான எந்த அறிகுறியும் இல்லை. கருப்புப் பணத்தை மீட்டு, ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் .15 லட்சம் டெபாசிட் செய்யப்படும் என்று மோடி வாக்குறுதி அளித்திருந்தார், ஆனால் சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் டெபாசிட் 286% அதிகரித்துள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

பா.ஜ.க. அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடியை தள்ளுபடி செய்தது, ஆனால் விவசாயிகளின் விவசாயக் கடனை தள்ளுபடி செய்யவில்லை, மாணவர்களின் கல்வி கடன் ரத்து செய்யவில்லை. மத்திய அரசின் கடுமையான நடவடிக்கையால் ஓராண்டு போராட்டத்தில் புதுடெல்லியில் விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று 2014 பிரதமர் அறிவித்தார் பல விவசாயிகள் இறந்ததுதான் இந்த அரசின் சாதனை. விவசாய உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலை நிர்ணயம் என்பது இந்த பட்ஜெட்டில் இல்லை.

சர்வ சிக்ஷா அபியானுக்கு வழக்கம் போல் ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை. NEP தேசிய கல்வி கொள்கையை அமல்படுத்தினால் மட்டுமே நிதியை வெளியிடுவோ என்று ஒன்றிய அரசு பிடிவாதமாக' உள்ளது. ஜிஎஸ்டி ஏற்கனவே மாநிலங்களின் வரிவிதிப்பு அதிகாரங்களை பறித்து விட்டது. தமிழ்நட்டு மக்கள் செலுத்தும் gst தொகை இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டுக்கு gst தொகை சுமார் ரூ 100க்கு 29ரூ மட்டும் ஒன்றிய அரசு வழங்குகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக, சென்னை மெட்ரோ ரயில் (கட்டம் 2) திட்டத்திற்கு மத்திய அரசு "நிதியை வெளியிடவில்லை". மற்ற நகரங்களுக்கு மெட்ரோ ரயில் பற்றிய அறிவிப்பு இல்லை. ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் திட்டங்களுக்கான நிதியை குறைத்து, கல்வி நிதியை நிறுத்தி, அவர்களின் சித்தாந்தத்தை தமிழ் நாட்டில் திணிக்கிறது. தமிழ் நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் சிறப்பான ஆட்சியில் கடும் நிதி நெருக்கடியிலும் கொரோனா நிவாரணம் 2 கோடி குடும்பங்களுக்கு தலா ரூபாய் 4000 சுமார் 8000 கோடி ரூபாய் வழங்கியது.

மகளிர் உரிமைத்தொகை, மாதம் ரூ 1000 , மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி, நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், கலைஞர் கனவு இல்லம், 3.10லட்சம் வீதம் வழங்கும் திட்டம், வெளி நாடுகளில் தொழில் முனைவோர்களை சந்தித்து சுமார் 7லட்சம் கோடி தமிழ்நாட்டிற்கு முதலீடு ஈர்ப்பு, பல் நோக்கு மருத்துவமனை சென்னையில் சுமார் 250கோடி முடிக்கப்பட்டது செலவில் ஓராண்டில் கட்டி தமிழ்நாடு மிகப்பெரிய வெள்ள பாதிப்பு ஏற்பட்ட போது தமிழ்நாடு மக்களுக்கு பா.ஜ.க. ஒன்றிய அரசு எந்த ஒரு உதவியும் செய்யாத சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 6000 ரூபாய் வீதம் தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு வழங்கியது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் தற்போது தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் 35 ஆண்டு காலமாக சிறப்பாக செயல்பட்டு வருவதை தொடர்ந்து மீண்டும் 2 லட்சம் விவசாயிகளுக்கு புதியதாக இலவச மின் இணைப்பு வழங்கியது, 201920ஆம் ஆண்டு விவசாயத்திற்கு பட்ஜெட்டில் 5% ஒதுக்கிய நிலையில் ஒவ்வொரு வருடமும் பட்ஜெட்டில் நிதியை குறைத்து 2024 பட்ஜெட்டில் ஒன்றிய அரசு 2.75%நிதி மட்டுமே வழங்கியது வருத்தமளிக்கிறது

அரசு பள்ளியில் படித்து வெளிநாட்டில் பட்டப்படிப்பு படிக்க இருக்கும் மாணவர்களுக்கு முழு தொகையும் தமிழ்நாடு அரசு ஏற்கும் என்ற அறிவிப்பு போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு மக்களின் மனதிற்கு ஏற்ப மிகச்சிறப்பாக தனக்கு வாக்களித்தவர்கள் வாக்களிக்காதவர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் தமிழ்நாட்டில் மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆனால் ஒன்றிய அரசு மக்கள் விரோத ஆட்சி நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்ட திராவிட மாடல் அரசின் முற்போக்கான மற்றும் தொலைநோக்கு திட்டங்களின் பலன்கள் ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு குடிமகனையும் நேரடியாகச் சென்றடைந்தது, அதனால்தான் திமுக தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது.

மைனாரிட்டி ஒன்றிய பா.ஜ.க. அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையை மட்டும் அறிவித்தது, அதுவும் பத்தாண்டுகளாக தொடங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது, ரூ.37,000 கோடி பேரிடர் நிவாரண நிதி, போன்ற கோரிக்கைகளை புறக்கனத்துள்ளது.

மாநிலங்களைத் கலந்தாலோசிக்காமல் மாநிலங்கள் வசூலிக்கும் முத்திரைத் தாள் கட்டணம் குறைக்கப்படும் என்ற அறிவிப்பு மாநில அரசுகளை தொடர்ந்து அவமானப்படுத்தும் செயல். மாநில உரிமைகளை பறிக்க ஒன்றிய அரசு துடிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு ஜிஎஸ்டி இழப்பீடாக .20,000 கோடியை கூட வழங்காத நிலையில், மாநிலங்களின் வரி விதிப்பு முறையை மாற்றியமைக்க ஒன்றிய அரசுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? கடந்த 10 ஆண்டுகளாக வருமான வரியில் எந்த சலுகையும் இல்லாமல் நடுத்தர மக்கள் தவித்து வருகின்றனர்.

வேடிக்கை என்னவென்றால் கடந்த 10ஆண்டு ஆட்சி வெறும் ட்ரைலர் தான், இனிதான் முழு படம் இருக்கிறது என்று மோடி அவர்கள் தேர்தலில் பேசினார், அதனால் தமிழ நாட்டு மக்கள் பாஜகவிற்கு ஒரு இடத்தில கூட வெற்றி தரவில்லை, படு தோல்வியையே அளித்தனர். எதிர் கட்சிகளை அழிக்க நினைக்காதீர்கள், தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு எதிரிகள் இல்லை என்றால் வாழலாம் ஆனால் வளர முடியாது, இது ஆட்சி செய்யும் அரசுக்கு மிகவும் பொருத்தமான பழமொழி. எனது ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கு எந்த ஒரு திட்டமும் இந்த பட்ஜெட்டில் அறிவிக்காததற்கு வருத்தத்தையும் கண்டனத்தையும் நாடாளு மன்றத் தொகுதி தெரிவித்துக் கொள்கிறேன். ஈரோடு மக்கள் சார்பாக

"நாடும் நமதே நாற்பதும் நமதே' என்ற எங்கள் தலைவர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு 40 இடங்களிலும் மகத்தான வெற்றியைதமிழ்நாட்டு மக்கள் தந்தார்கள்.

மைனாரிட்டி ஒன்றிய அரசு மாநிலங்களை சமமாக நடத்தவில்லை., ஆனால் "எங்கள் திராவிட மாடல் அரசு எப்போதும் எல்லோருக்கும் எல்லாம் என்று

அனைவருக்கும் வழங்குகிறது. சமமாக திட்டங்களை வகுத்து இறுதியாக ஒன்றை இந்த அரசுக்கு சொல்லுகிறேன் "நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் 2024 உங்கள் அரசாங்கத்தைக் காப்பாற்றக்கூடும், ஆனால் நாட்டைக் காப்பாற்றாது. அரசாங்கத்தை அதன் போக்கில் நடத்துங்கள். தேர்தலில் உங்களைத் தோற்கடித்தவர்களை பழிவாங்கும் எண்ணத்தில் இருக்காதீர்கள், என்ற எங்கள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் எச்சரிக்கையை இந்த அரசுக்கு நினைவு படுத்தி முடிக்கிறேன்.

எங்கள் தமிழ்நாடு உங்களுக்கு எதிராக உயர்த்தப்பட்ட ஒற்றை செங்கலை கொண்டாடுகிறது, நீங்களோ செங்கோலை இங்கு வைத்துக்கொண்டு கொடுங்கோல் ஆட்சி செய்ய நினைக்கிறீர்கள்.

மைனாரிட்டி ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து இந்திய கூட்டணியின் இரண்டாவது சுதந்திர போர் தொடரும்..

இவ்வாறு மக்களவையில் கே.இ.பிரகாஷ் உரையாற்றினார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண்.61இல் உள்ள டிரான்ஸ்போர்ட் லேனில் சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிய பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்காக, பழைய பொதுக் கழிப்பிடம் இடிக்கப்படுவதை ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சியின் வடக்கு மண்டலத் துணை ஆணையர் ரவி கட்டா தேஜா, மண்டலம் 5இன் செயற்பொறியாளர் சொக்கலிங்கம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

அரசியல் ரீதியாகவோ அல்லது ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்று சந்தேகம்!

ஒலிம்பிக்கில் வினேஷ் போகத்தின் தங்க வாய்ப்பு தகர்ந்தது!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஆக. 9- ஒலிம்பிக்கில் வினேஷ் போகத்தின் தங்க வாய்ப்பு தகர்ந்தது. அரசியல்ரீதியாகவோ அல்லது ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்துள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

இதுகுறித்து 8.8.2024 தேதிய 'தினகரன்' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:-

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 33வது ஒலிம்பிக் போட்டி கடந்த ஜூலை 26ம் தேதி துவங்கியது. உலக விளையாட்டுகளின் திருவிழாவாக போற்றப்படும் ஒலிம்பிக்கில் இம்முறை 205 நாடுகளில் இருந்து 10,500 வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்திய அணி சார்பில் நீரஜ் சோப்ரா, வினேஷ் போகத், மனு பாகர், தீபிகாகுமாரி, லக்சயா சென், போபண்ணா உட்பட 117 பேர் கலந்து கொண்டனர். ஒலிம்பிக்கில் இம்முறை மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், பேட்மின்டன் போன்ற பிரிவுகளில் தங்கம் அல்லது வெள்ளிப்பதக்கங்களை நமது வீரர்கள் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. துப்பாக்கி சுடுதல் பிரிவில் வீராங்கனை மனு பாகர் வெண்கலம் வென்று, இந்தியாவின் பதக்க வாசலை திறந்து வைத்தார். இந்தியா இதுவரை 3 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது.

தினகரன்

ஆகஸ்ட் 8, 2024 விளையாட்டுமலர்

தங்க வாய்ப்பு தகர்ந்தது

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 33வது ஒலிம்பிக் போட்டி கடந்த ஜூலை 26ம் தேதி துவங்கியது. உலக விளையாட்டுகளின் திருவிழாவாக போற்றப்படும் ஒலிம்பிக்கில் இம்முறை 205 நாடுகளில் இருந்து 10,500 வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்திய அணி சார்பில் நீரஜ் சோப்ரா, வினேஷ் போகத், மனு பாகர், தீபிகாகுமாரி, லக்சயா சென், போபண்ணா உட்பட 117 பேர் கலந்து கொண்டனர்.

ஒலிம்பிக்கில் இம்முறை மல்யுத்தம், துப்பாக்கி சுடுதல், பேட்மின்டன் போன்ற பிரிவுகளில் தங்கம் அல்லது வெள்ளிப்பதக்கங்களை நமது வீரர்கள் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. துப்பாக்கி

ஒருவராவது தங்கம் வெல்லமாட்டாரா என்பது பல கோடி இந்திய மக்களின் கனவாக இருந்து வந்தது. இந்த சூழலில், இந்தியா தங்கம் வெல்வதற்கான பிரகாசமான வாய்ப்பை, மல்யுத்த போட்டியில் பெண்களுக்கான 50 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற வினேஷ் போகத் உறுதி செய்தார்.

அரையிறுதிப் போட்டியில் இவர், கியூபாவை சேர்ந்த நம்பர் ஒன் வீராங்கனையான யூஸ்னிலிஸ் குஸ்மேனை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றார். நம்பர் ஒன் வீராங்கனையை வீழ்த்தியதன் மூலம் தங்கத்தை தட்டிச் செல்வார்; தவறினாலும் வெள்ளி உறுதி என்ற நிலை இருந்ததால், வினேஷ் போகத்துக்கு இந்திய ரசிகர்கள் பாராட்டுகளை தெரிவித்தவண்ணம் இருந்தனர். அதேநேரம் இது விளையாட்டு போராட்டத்துக்கான வெற்றியாக மட்டும் மக்கள் பார்க்கவில்லை. காரணம், கடந்தாண்டு தங்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக இந்திய மல்யுத்த சம்மேளன தலைவரும், அப்போதைய பாஜ எம்பியுமான பிரிஜ் பூஷண் சரண்சிங் மீது, இந்திய மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்ஷி மாலிக் உள்ளிட்டோர் புகார் தெரிவித்தனர். ஒன்றிய பாஜ அரசு இந்த விவகாரத்தை மூடி மறைக்க முயல்வதாக கூறி, வீராங்கனைகள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்தினர். இந்த விவகாரம் நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த ரணத்துக்கு மருந்தாகவும், ஒன்றிய அரசின் போதிய ஒத்துழைப்பு இல்லாத சூழலிலும், ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு மிகப்பெரிய பெருமையை தேடித்தந்தார் வினேஷ் போகத். ஆனால், அந்த மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்காததுதான் அவரது துரதிருஷ்டம்.

நேற்றைய இறுதிப்போட்டிக்கு முன்னதாக அவரது எடை பரிசோதிக்கப்பட்டபோது, 50 கிலோ எடையுடன் 100 கிராம் கூடுதலாக இருந்ததாக கூறி, அவரை தகுதி நீக்கம் செய்வதாக சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பு அறிவித்து, இந்திய மக்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. முன்னதாக, அரையிறுதிப் போட்டி முடிந்த பின், எடையை வினேஷ் போகத் பரிசோதித்துள்ளார். அப்போது எடை கூடுதலாக இருந்துள்ளது. இதனால் விடிய, விடிய கடும் உடற்பயிற்சிகளை மேற்கொண்டதாகவும், அப்படியும் எடை அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. லீக் முதல் அரையிறுதிக்கு முன் வரை 50 கிலோக்குள் இருந்த எடை திடீரென அதிகரித்தது எப்படி? இந்த விஷயத்தில் ஏதேனும் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு ஏதாவது சதி நடந்திருக்கலாமோ என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. இந்திய வீரர்கள், வீராங்கனைகள் வரலாற்று வெற்றியை நோக்கிச் செல்லும்போதெல்லாம் சர்ச்சை எழுவது வழக்கமாகவே உள்ளது. அன்று பாலியல்ரீதியாக பாதிக்கப்பட்ட வீராங்கனைகளை, இன்று மன உளைச்சலில் ஆளாக்கியிருக்கிறது சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பு. இதற்கு இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் விளையாட்டு வீரர்கள், ரசிகர்கள் தங்களது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு தினம்!

புதுக்கோட்டையில் அமைதிப் பேரணி - சிலைக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஆக 9- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2023 புதன் கிழமை காலை 9.30 மணியளவில் அமைதி ஊர்வலம் புதுக்கோட்டைக்கு கீழ ராஜா வீதி அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு கீழ ராஜவீதி வடக்கு ராஜ வீதி வழியாக மாவட்ட திமுக அலுவலகம் சென்றடைந்தது. மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில்உள்ளமுத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு புதுக்கோட்டைவடக்குமாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வுகளில் நிகழ்வுகளில் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம். சுப.சரவணன், செ. அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், அரு. வீரமணி, க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, எம். லியாகத் அலி, ஆ.செந்தில், க. ராஜேந்திரன், சு.சண்முகம், தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, எம். செந்தில் குமார், கே.எஸ். சந்திரன், மு.க.ராம கிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து. ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், பொன்.ராமலிங்கம், அ. இளங்குமரன், கே.பி. கே.டி.தங்கமணி, கே.பி. அய்யப்பன், அ.முத்து, சி.சண்முகம், ஆர்.ஆர். சாமிநாதன், வி.ஆர். இளையராஜா, உமுருகேசன், பி. அண்ணாத்துரை, வை.விஜயக்குமார், முகம்மது ரிஷா, திலகவதி செந்தில், .அ.ரெத்தினம், எம்.எம்.பாலு, சி. அரங்கநாயகம், டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சி வாணன், ஆ.கலைச்செல்வன், பொன்.பாரி, புத்தாம்பூர் சுப்பையா, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம். பாலமுருகன், செந்தாமரை பாலு, வே.ராஜேஸ் , டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, எம்.ஜி (எ) ராமச்சந்திரன், , எஸ்.வி.ஆர்.ஜெய்ஸ்டாலின், அ.பிரபா, கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி , விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷீத், இராம செல்வ ராஜ், ராய.முத்துக்குமார், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச்செல்வன், டி.செல்வம், கை. பழனிச்சாமி, மழையூர் ராமசாமி, மீனம்பட்டி வெங்கடேசன், டி. அப்புக் காளை, கனகம்மன் பாபு, சுந்தர்ராஜ், தெய்வானை, ராயல் சபா, மு.ராஜதுரை, எல்.ஐ.சி. ரமேஷ், யு.எம்.கிருஷ்ணமூர்த்தி, சுகி (எ) சுகுமாறன், செ.ரமேஷ், செ.கணேஷ், வழக்கறிஞர் அரவிந்த், வடவாளம் க.செ.மணிமாறன், அ சையது முகம்மது, சி. மதியழகன், க.ச.த. தென்னரசு, சிப்காட் சந்திரசேகரன், ஏ.எம்.சிற்றரசு, இனியன், எழில்ராஜா, மேலவிடுதி ஆறுமுகம், இதயம் அப்துல்லா, கேஆர்.பாலமுத்து, சுமோ பாலு, கி.சுப்பிரமணியன், வை.நடராஜன், சுந்தர்ராஜ், பா. ரெங்கராஜ், மா.மணிவேலன், பழனிவேலு, வி.ஏ.சி. சி.ராஜேந்திரன், ஏ.பி.ஆர். ராஜாங்கம், தேன் கனிப்பட்டி ராஜா, முரளி, முரளி சுப்பையா, முரளி, அருண் குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வட்டக் கழகம் சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் ந.பாலு தலைமையில் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி 500 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டது. பகுதி கழகச் செயலாளர் சொ.வேலு எம்.சி முன்னிலையில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். உடன் தில்லை குமார், முரளிதரன், நாராயணன், வெங்கடேசன், மதிவாணன், செல்வம், என்.மனோகரன், ஜான்சி ராஜேந்திரன், குணசேகரன், லோகேஷ், பி.பன்னீர்செல்வம், விஜயகுமார், ராஜேஸ்வரி, கோபி, ஆர்.மோகன், கோவிந்தராஜ், சிவக்குமார், எஸ்.பன்னீர்செல்வம், வடிவேலு, சீனிவாசன், ராசலிங்கம், மோகன், எஸ்.மனோகர், மனோஜ், ஏழுமலை, தினகரன், சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் தழிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாவட்டச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் ஆலோசனைப்படி, ஆரணியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் பேரூர் செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார். முன்னாள் பேரூர் செயலாளர்கள் ஜி.பி. வெங்கடேசன், டி.கண்ணதாசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ரோஸ் பொன்னையன், வழக்கறிஞர் ஜி.ரமேஷ், ஜி.கரிகாலன், டி.கோபிநாத், ஆர்.கலையரசி, டி.எஸ். குருவப்பா, என். ரகுமான்கான், டி.ஜெயக்குமார், எல்.உதயகுமார், சி.நீலகண்டன், கே.ஆர்.சீனு, புதுநகர் பாலாஜி, கே.நாகராஜ், ஜெ.மகேந்திரன், மகேத்திரன், சாய்சத்யா, கே.ஐஸ்வர்யா, எஸ்.பிரபுகுமார், கே. இளங்கோவன், எஸ். நாகராஜ், ஏ.ஆறுமுகம், கே.பரீன், எம்.எம். சுல்தான், டி.பாஸ்கர், டி.தமிழ்செல்வன், கே.திருமலை, ஜி.பாஸ்கர், எஸ்.பி.உமாபதி, தினேஷ், சீராஜ்தீன், மங்களம் டி.வெங்கடேசன், செல்வசேகர், எடுக்குவாய் ஜெகன், பேங்க் விஸ்வநாதன், வனம்மா, சரளம்மாள், ராஜம்மா, மதுரம்மா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

தஞ்சை மாவட்ட 'முரசொலி' செய்தியாளர் வீ.சரவணன் தந்தையார்

ச.வீரமணி படத்திறப்பு நிகழ்ச்சி!

சு.கல்யாண சுந்தரம் எம்.பி. திறந்துவைக்கிறார்!

தஞ்சாவூர்,ஆக. 9- தஞ்சாவூர் மாவட்ட முரசொலி நிருபர் வீ.சரவணன் அவர்களின் தந்தையார் மறைந்த ச.வீரமணி அவர்களின் படத்திறப்பு விழா 11.08.2024 ஞாயிறு அன்றுகாலை கும்பகோணம் அசூர் பைபாசில் உள்ள மீரா கார்டன் ராஜ் அப்பார்ட்மெண்டில் நடைபெறுகிறது.

மறைந்த ச.வீரமணி அவர்களின் திருஉருவப் படத்தை மாவட்டக்கழக செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார். மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ,தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.ராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், மாநகர செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் எஸ்.கே.முத்து செல்வம், தெற்கு மாவட்ட செயலாளர் கா.அண்ணா துரை, சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அசோக்குமார், மாநகர மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்கின்றனர்.

கலைஞர் நினைவு நாள் அன்று மயிலை கிழக்கு மற்றும் மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி சார்பில் அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் முன்னிலையில் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது , நிகழ்ச்சி ஏற்பாடு மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் எஸ் மோகன், மேற்கு பகுதி துணை அமைப்பாளர் முருகன். நிகழ்ச்சிக்கு தலைமை மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, 124 அ வட்ட செயலாளர் ம.ப.அன்பு, 121வது வட்ட செயலாளர் சி.கிருஷ்ணமூர்த்தி இந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். மாவட்ட துணை தலைவர் கே.பாலகிருஷ்ணன், மாவட்ட துணை அமைப்பாளர் அயன்